அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 23/89

அரசாங்க நிருவாக, மாகாண சபைக
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07
1989, மார்ச் .. 23 .. ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

சிறு பணியாளரொருவருக்கான லீவு -
தாபன விதிக்கோவை - அத்தியாயம் XII

---

26ஆம் பிரிவின் பின்வரும் உபபிரிவுகளை கீழே கொடுக்கப்பட்டுள்ளதன்படி திருத்துக:-

26:1:3 - சிறு பணியாளரொருவர் அவரது சேவையின் முதலாவது ஒன்பது மாதங்களில் 26:1ஆம் உபபிரிவின் கீழ் அவருடைய பிணி லீவில் அவருடைய சேவையின் 9மாதங்களுக்குரிய பகுதியை மட்டுமே பிணி லீவாகப் பெறுவதற்குத் தகுதியுடையவராவர்.

26:2 - சிறு பணியாளரொருவருக்கு 9:1ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளின்படி விபத்து லீவு வழங்கப்படலாம்.

26:2:1 - நீக்கிவிடுக.

26:2:2 - நீக்கிவிடுக.

26:3 - தமது கடமைகளை உண்மையாக நிறைவேற்றும் போது பிணியுறும் சிறு பணியாளரொருவருக்கு 9:2ஆம் உபபிரிவிலுள்ள அதே நிபந்தனைகளுக்கு உட்பட்டு விசேட லீவு வழங்கப்படலாம்.

26:4:1 - பிணி காரணமாக அரை லீவு வழக்கமாக வழங்கப்படலாகாது. ஆனால் 26:1 ஆம் 26:1:3ஆம் உபபிரிவுகளின் பேரில் கிடைக்கக் கூடிய தமது பிணி லீவைச் செலவழித்து முடித்துள்ள பணியாளரொருவரின் விடயத்தில் திணைக்களத் தலைவரின் தற்றுணிபின்படி இந்த விதி தளர்த்தப்படலாம்.

இத்தகையவொரு விடயத்தில் வழங்கப்பட்ட அரை லீவு அந்த உபபிரிவுகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட பிணி லீவை உடனடுத்து தொடரப்படலாம்.

ஒப்பம்: (சிறில் கமகே)
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

சியா/24